

சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இசை நிழ்ச்சி நடந்த போது எடுத்த படம்.

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இசை நிகழ்ச்சி!

சென்னை, பிப். 17–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக,

சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்குதமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னைமெட்ரோ ரெயில் நிறுவனம் ஸ்ரீ சதய் சாய் சேவா அமைப்புடன் இணைந்து பாலா விகாஸ் நாடகம் நடைபெற்றது. இந்தநாடகம்சமூகவிழிப்புணர்வு மற்றும் ஒரு குடிமகனின்பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் இருந்தது. இந்நிகழ்ச்சி வடபழனி மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து – சென்ட்ரல்மெட்ரோரெயில் நிலையத்தில் (தெரு நிலை) மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை ஆன்தி ஸ்டீரிட் ஆப் சென்னை, கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.